# போப்பே போத்தல பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 பெப்ரவரி 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, போப்பே போத்தல பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான போப்பே போத்தல பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

சபையினால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 2,302,963 தொகையான செலவினத்திற்காக நிதிக் கூற்றுக்களில் நிதி ஏற்பாடுகள்

மேற்கொள்ளப்படாமையினால் ஆண்டின் செலவினம் ரூபா 2,302,963 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 871,667 தொகையான மூலதன உதவிகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமையினால் ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் கடன்பட்டோர் என்பன ரூபா 871,667 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 13,910,524 தொகையாக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 8,500,000 எனக் காண்பித்தமையினால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 5,410,524 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சம்பள மீளளிப்பிற்காக உள்ளூராட்சித் திணைக்களங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 8,781,367 தொகையான பணம் சகல நிகழ்ச்சித்திட்டத்திற்குமிடையே பகிர்ந்தளிக்கப்படாமல் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 128,661,086 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,140,220 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,131,970 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 11,586 | 5,937 | 16,855 |
| (ii) | வாடகை | 1,523 | 2,003 | 592 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 41 | 205 | 143 |
| (iv) | ஏனைய வருமானம் | 25,604 | 24,924 | 35,770 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 595,127 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 13,259,376 |

### 2.2.3 கடை வாடகை

லபுதுவ சந்தைத் தொகுதியில் 13 கடைகளிலிருந்தும் ரூபா 83,810 தொகையானது 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. கடைகளுக்காக அதன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் கடைகளை மதிப்பீடு செய்து வாடகையை அதிகரிப்பதற்கோ அல்லது வரி உடன்படிக்கையை புதப்பிப்பதற்கான நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 இறைச்சிக் கடை வாடகை

12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 04 வாடகையாளரிடமிருந்து ரூபா 306,603 தொகையான இறைச்சிக் கடை வாடகை அறவிட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1) ஆம் பிரிவிற்கு முரணாக உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூல அங்கீகாரம் மற்றும் முறையான நியமனக் கடிதம் இன்றி ஒரு ஆயர் வேத வைத்தியர் 2010 மே தொடக்கம் 2012 மார்ச் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளமாக ரூபா 318,335 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிரதம அமைச்சு செயலாளரின் 2011 யூன் 28 ஆந் திகதிய தபச/பிரஅ/பபா/2/52 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் உள்ளூராட்சி நிறுவனத்தின் விளையாட்டு விழாக்களுக்காக ரூபா 25,000 தொகை சபை நிதியத்திலிருந்து செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அவ் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை விஞ்சி மேலதிகமாக ரூபா 21,953 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 2.4 செயற்பாட்டு / முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரினால் 1992 செப்தெம்பர் 30 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட 3/2/1/10(ii) ஆம் இலக்க சுற்று நிரூபத்தின் பிரகாரம் 01 ஹெக்டேயருக்கு மேற்பட்ட ஒவ்வொரு கூறிடல்களிலும் வீதிகளுக்கு

ஒதுக்கப்பட்டதன் பின்னர் காணியின் அளவில் 10% பொதுச் செயற்பாடுகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட வேண்டும் என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் ஏல விற்பனை மூலம் சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 10 காணித்துண்டுகளுக்குரிய 171.36 பேர்சஸ் அளவிற்குரிய உரித்துறுதி / நன்கொடை உறுதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் 05 ஆம் பந்தியின் பிகாரம் கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 முன் பள்ளிச் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை திருத்துதல்

நிர்மாணங்களுக்காக சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் நாட்கூலி தவிர்த்து ரூபா 100,000 மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2011 திசெம்பர் 30 ஆந் திகதி கிராம அபிவிருதிச் சங்கத்துடன் ரூபா 97,472 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்த காலம் 03 மாதங்களாக இருந்தது. ரூபா 90,825 தொகையில் நாட்கூலி தவிர்ந்த முதலாம் மற்றும் இறுதி கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் 2012 மார்ச் 09 ஆந் திகதி ரூபா 81,717 தொகை ஒப்பந்தக்காரச் சங்கத்திற்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

ஆரம்ப மதிப்பீட்டை விட மேலதிகமான வேலைப் பகுதியை நிறைவேற்றியமையின் காரணமாக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் நாட்கூலி தவிர்த்து ரூபா 300,000 தொகையான திருத்தப்பட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. பின்னர் மதிப்பீட்டை விட மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட வேலைப் பகுதிக்காக 11 ஆவது கட்டமாக ரூபா 197,000 தொகையான மதிப்பீடு நாட்கூலி தவிர்த்து தயாரிக்கப்பட்டு ரூபா 195,720 தொகையில் 2012 மார்ச் 09 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் நிர்மாண வேலைகள் முடிவடைந்ததன் பின்னர் முறையற்ற வகையில் நிறைவேற்றப்பட்ட மேலதிக வேலைப்பகுதிக்காக இரண்டு மாதங்களின் பின்னர் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு செல்லுபடியற்ற உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருந்தது. அவ்வாறே தொழில்நுட்ப உத்தியோகத்தர் தயாரித்த மதிப்பீடுகளில் அளவிடை அறிக்கை மற்றும் கொடுப்பனவு அறிக்கைகளில் திகதி

குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்